நாள் 29.03.2021 - திங்கள் கிழமை

EA. No. 32/2014 in E.P. No. 15/2011

RW2 ரமாதேவி, க/பெ. ரமேஷ்குமார்

முதல் விசாரணை தொடர்ச்சி

எனது கொள்ளு தாத்தா வைத்தியலிங்க வாண்டையார் சுக்கிரவாரகட்டளை கிராமத்தில் வசித்ததற்கு ஆதரவாக அவர் பெயரில் ஏற்பட்ட முறையே 21.03.1865, 06.11.1865, 11.10.1867 மற்றும் 14.11.1890 ஆகிய தேதியிட்ட அசல் கிரய சாசனங்களை (எண்ணிக்கை 4) தாக்கல் செய்கிறேன், அது ம.த.சா.ஆ.- 1 ஆகும். எங்களது கொள்ளு தாத்தா, தாத்தா, தகப்பனார் ஆகியோர்கள் பூர்வீகமாகவே மேற்படி சுக்கிரவாரகட்டளை கிராமத்தில் தான் வசித்து வந்தோம்.

**எதிர் மனுதாரர்/மனுதாரர் (EP) தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து என்ன விஸ்தீரணம் என்றும், சர்வே எண் பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோல் தாவா சொத்தின் ஓட்டு வீடு ஒன்று உள்ளது என்றால் சரிதான், அதன் கதவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் சர்வே எண். 150/5E என்று நான் தாக்கல் செய்துள்ள 4 எண்ணிக்கையிலான எனது கொள்ளு தாத்தா பெயரிலுள்ள கிரய சாசனத்தில் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கட்சி ஆடி வருகிறேன் என்றால் சரியல்ல.